# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1901/14 - 2015 පෙබරවාරි මස 11 වැනි බදාදා - 2015.02.11

*1901/14 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின் (1) (அ) ஆம் உள்ளுறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள விடயங்களும் பணிகளும் மற்றும் திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின் (1) (ஆ) ஆம் உள்ளுறுப்புரையின் பிரகாரம் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி செயற்படுத்தப்பட வேண்டுமென என்னால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, பெப்புருவரி 10.

**அட்டவணை**

*1.* ***பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ;***

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| (1) II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தலும் வழிநடாத்துதலும் | 1. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை, பதவி நிலைக் கல்லூரி<br>2. ரணவிரு சேவை அதிகாரசபை | * (2008 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) பாதுகாப்புச் சேவைகள் ஆணை மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டம் |
| (2) III ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள சட்டங்களைச் செயற்படுத்தல் | 3. பாதுகாப்புச் சேவைகள் பாடசாலை<br>4. தேசிய பயிலிளவல் சிறப்பணி | * (1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) ரணவிரு சேவை அதிகார சபைச் சட்டம் |

2- 734




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.